www.padippakam.com

# வணக்கம் வாருங்கள்



1-04-2007 (ஞாயிற்றுக் கிழமை)

# உள்ளே

படிப்பகம்

www.padippakam.com

# அட அதற்குள் ஓர் ஆண்டா?



## அமரர் சி.புஸ்பராஜா
(மயிலிட்டி)

1951 - 2006

ஒரு நல்ல எழுத்தாளன் அவனது காலகட்ட இளைஞர்களைக் கவரும் வகையிலும் அடுத்த தலைமுறை இளைஞர்கள் விமர்சிக்கும் வகையிலும் பள்ளி ஆசிரியர்கள், சமுதாயம் அதை என்றென்றும் கோடிட்டுக் காட்டும் வகையிலும் தனது படைப்புகளைப் படைக்க வேண்டும். (பெர்னாட்ஷாவின் படைப்புகள் இன்றும் பேசப்படுவது போல்)


*ஸ்காட் பிட்ஸாரால்டு - எபோ*

படிப்பகம்

www.padippakam.com

# நான் புஸ்பராஜா பேசுகிறேன்

30 – 11 – 51



10 – 03 – 06

# மறுபடியும்

என்ன அப்படி அசந்து போய் உட்கார்ந்து கம்மென இருக்கிறீங்கள்?
உங்கள் அதே புஸ்பராஜாவேதான்!
ஆனால் என்ன சுமார் ஓர் ஆண்டு கழித்துப் பார்க்கிறோம் அல்லவா? அதனால் ஓர் சின்ன ஆச்சரியம் உங்களுக்கு அவ்வளவு தான்!
ஆனால் எனக்கு அப்படி இல்லவே இல்லை!
காரணம் நான் தான் நித்தமும் உங்களைப் பார்த்த வண்ணம் உள்ளேன் அல்லவா!
எனக்கு ரொம்ப ரொம்ப சந்தோஷமாய் இருக்கு உங்கள் அனைவரையும் மீண்டும் ஒன்றாகச் சந்திப்பதில்!
ஏதோ என்னை மறவாது மறுபடியும் நினைவு கொள்ள வந்ததுக்கு நன்றி சொல்ல வேண்டியது எனது கடமையல்லவா?
உங்களின் அக்கறையை மெச்சுகிறேன்!

**வணக்கம்**

படிப்பகம்

www.padippakam.com

# எப்படி ? எப்படி ?

## ஒரு நல்ல நண்பனை எப்படித் தேர்ந்தெடுப்பது?

ஒரு நல்ல நண்பனைத் தேர்ந்தெடுப்பதற்கு, தீய நண்பர்கள் யார் என்று அறிய வேண்டும். ஏனென்றால் சமூகத்தில் நல்லவர்களும், கெட்டவர்களும் கலந்தே இருக்கிறார்கள். அதைப் போல நல்ல குணமும், கெட்ட குணமும் ஒருவரிடம் கலந்தே இருக்கும். ஆனால் அந்தக் குணங்களில் எது அதிகமாக இருக்கிறது என்பதை நீங்கள் சற்று சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். இந்த உலகத்தில் 100 சதவிகிதம் நல்லவனும் கிடையாது; 100 சதவிகிதம் கெட்டவனும் கிடையாது. இதைச் சரியாகப் புரிந்து கொள்ளுங்கள்.

சிறந்த நற்குணங்கள் உள்ளவரிடம், ஏதாவது ஒரு சிறு கெட்ட பழக்கம் இருந்தே தீரும். இதைப் பொருட்படுத்தக் கூடாது. காமராஜர், நேரு போன்றவர்களுக்கு முன் கோபம் அதிகம். சட்டென்று கோபம் வந்துவிடும். ஆனால் அவர்களது உள்ளமோ தங்கச் சுரங்கம். எப்பொழுதுமே பொதுநலனை நினைத்தே செயல்படுவார்கள். அவர்களிடம் சிறிதுகூட தன்னலம் கிடையாது.

அதற்கு மாறாக எத்தனையோ அரசியல்வாதிகள், அரசாங்க அதிகாரிகள், லஞ்சத்திலேயே பிறந்து, லஞ்சத்திலேயே வாழ்ந்து, லஞ்சத்திலேயே மடிகிறார்கள் - பன்றிகளைப் போல. ஆகவேதான் வள்ளுவர், 'மக்களே போல்வர் கயவர்' என்றார். உள்ளத்திலே கயமைத்தனம், கெடுதல் குணம் கொண்டு, வெளியிலே நல்ல மனிதர்கள் போல நடிப்பார்கள். இவர்களை இனம் கண்டு கொள்ளுவது அவ்வளவு சுலபமல்ல.

காந்திஜியைச் சுடுவதற்கு முன்பு கோட்சே எப்படி நடந்து கொண்டான் என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் இது நமக்கு முன்பே வள்ளுவருக்குத் தெரிந்திருக்கிறது. அதுதான் ஆச்சரியம். ஆகவேதான் 'தொழுத கையுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்' என்று எழுதினார். என்ன அர்த்தம்? 'வணக்கம் செலுத்தும் கைக்குள்ளே ஒரு படையே அடங்கும் அளவுக்கு உள்ள கருவியை மறைத்து வைக்கப்பட்டிருக்கும்' என்கிறார். ஆகவேதான், நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு கெட்ட நண்பர்கள் யார் என்று நீங்கள் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். ஒரு மூட்டையில் அரிசியும், கல்லும் கலந்தே இருக்கிறது. நீங்கள் அரிசியைச்



படிப்பகம்

www.padippakam.com

> உலகில் அதிசயமான காரியம், முட்டாள் வெற்றியடைவதும், அறிஞன் தோல்வி அடைவதும் தான்.
>
> -அரேபியா.

சுத்தப்படுத்த என்ன செய்கிறீர்கள்? கல்லை அடையாளம் கண்டு பொறுக்கி எறிகிறீர்கள். இல்லையா? அதைப் போலத்தான் கெட்டவர்களை அடையாளம் கண்டு கொண்டு தூர விலகுங்கள். இங்கே நீங்கள் ஒரு சந்தேகத்தை எழுப்பலாம். அதாவது, அரிசிக் குவியலில், கல் சிறிதளவுதான் ஆங்காங்கே இருக்கும். ஆகவே, அதை அடையாளம் கண்டு கொள்ளுவது சுலபம்; அதை விலக்குவதும் சுலபம். ஆனால் சமூகத்தில் இப்படியா?' என்று.

நீங்கள் நல்லவர்களைத் தேடும்பொழுது குறுக்கே சில கயவர்களும் வரத்தான் செய்வார்கள். இவர்களை அடையாளம் கண்டு விலக்குவது சுலபம். நீங்கள் நினைப்பது போல சமூகத்தில் கொடுமையான கெட்டவர்கள் ஒருசிலர்தான். இவர்கள்தான் தாதாக்கள். மற்றவர்கள் எல்லாம் நல்லதும், கெட்டதும் கலந்தே உள்ளவர்கள்தான். இவர்களிடம் நம்முடைய குணத்துக்கு ஏற்ப யார் நல்லவர்கள், யார் கெட்டவர்கள் என்று நீங்கள் தீர்மானிக்க வேண்டும். இதில் நீங்கள் கருதும் கெட்ட குணங்கள் உள்ளவர்களை அடையாளம் கண்டு கொள்ளுவது சுலபம்.

அடுத்து இன்னொன்றையும் புரிந்து கொள்ளுங்கள். உங்களுக்கு நல்லவனாகத் தெரிபவர், அடுத்தவனுக்குக் கெட்டவனாகத் தெரிவார். இதற்குப் பெயர்தான் 'கண்ணோட்டம்' என்பது. ஒரு பெண், உங்கள் கண்ணுக்கு மிகவும் அழகாகத் தெரிவாள். அடுத்தவன் கண்ணுக்கு அப்படித் தெரிய மாட்டாள். ஏனெனில் ஒரு பெண்ணிடம் அழகும், அவலட்சணமும் கலந்தேயிருக்கும். அதைப் போலத்தான் நண்பர்களும்.

ஆகவே, பொதுவாகக் கீழ்க்காணும் கீழான குணங்களை உடையவர்களைத் தவிர்ப்பது நல்லது.

## 1. வளவளவென்று பேசுபவர்கள்

ஒரு சிலர், எப்பொழுதும் எதையாவது பேச வேண்டும் என்று ஆர்வம் உடையவர்கள். இவர்களால் ஒருக்காலும் பேசாமல் இருக்க முடியாது. அப்படி ஒரு நிலை ஏற்பட்டால், உயிரைக் கூட விட்டு விடுவார்கள். இவர்கள் பிறரைத் தேடி அலைவது பேசுவதற்காகத் தான்.



படிப்பகம்

www.padippakam.com



என்னுடைய மிக நெருங்கிய சொந்தக்காரர் ஒருவர், பேச ஆரம்பித்தால் மணிக்கணக்கில் பேசுவார். இவருக்குப் பேச ஆரம்பிக்கத்தான் தெரியும், பேச்சை நிறுத்தத் தெரியாது - பிரேக் இல்லாத வண்டியைப் போல. ஒரு சமயம் இவரோடு பேசிக் கொண்டு இருக்கும்பொழுது, பேச்சை அவர் ஆரம்பித்ததும் மணியை கவனித்தேன். பிறகு 'ஆமாம், இல்லை' என்று மட்டும் கூறி தலையை அசைத்துக் கொண்டே இருந்தேன். இடையில் நான் எதுவுமே பேசவில்லை. அப்படி இடையில் நாம் பேசினாலும் அவருக்குப் பிடிக்காது. தான் மட்டும்தான் பேசவேண்டும். இப்படி அவரே பேசி களைப்படைந்து, மீண்டும் சுமார் மதியம் 2 மணிக்கு ஆரம்பித்தவர் மாலை 7 மணி அளவில்தான் நிறுத்தினார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

என்ன அப்படிப் பேசுவார் என்றா கேட்கிறீர்கள்? வேறு என்ன, சுயபுராணம்தான்! கீறல் விழுந்த கிராமபோன் தட்டுபோல பத்து வருடத்துக்கு முன்பு சொன்ன கதையை, சற்று கை, கால் (பொய்!) வைத்து அளப்பார். இதை எப்படி சகிப்பது? ஒரு சமயம் அவரிடம், 'நீங்கள் வரும்பொழுதே, ஒரு டேப்ரிகார்டரை உங்கள் கூடவே கொண்டு வாருங்கள். பாவம், ஒவ்வொரு தடவை வரும்பொழுதும், கிட்டத்தட்ட அதையே தான் பேசுகிறீர்கள். நீங்கள் வந்ததும் அதைப்போட்டு விட்டு உட்கார்ந்து விடலாம். உங்கள் சக்தியையாவது மிச்சப்படுத்தலாம். நாங்களும் காதில் பஞ்சை வைத்து அடைத்துக்கொண்டு, எங்கள் வேலையைப் பார்க்கலாம்' என்று விளையாட்டாகச் சொன்னேன். இதில் வேதனை என்னவென்றால், அவரும் அதை விளையாட்டாக எடுத்துக் கொண்டு நான் சொன்னதை காதிலே வாங்காது அதே புராணத்தையே மீண்டும் மீண்டும் பாடிக் கொண்டிருக்கிறார்.

தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருக்கும்பொழுது, செய்தியில் ஏதாவது சொன்னால், 'இப்படித்தான், நான் டெல்லியில் இருக்கும்பொழுது...' என்று ஆரம்பித்து விடுவார். பிறகு செய்தியை அவரும் கேட்க மாட்டார், நம்மையும் கேட்க விட மாட்டார். அவ்வளவுதான். இந்த வேதனையை எங்கே போய்ச் சொல்லுவது? இவரை என்னால் தவிர்க்கவும் முடியாது. அப்படி ஒரு நெருக்கமான உறவினர். நான் இவரிடம் மாட்டிக்கொண்டு

**பழமொழி**

நன்றி கெட்டவனுக்கு நன்மை செய்வது, கடலுக்குள் பன்னீரை ஊற்று வது போல.

படிப்பகம்

www.padippakam.com

**பழமொழி**

கோபத்தால் சாதிப்பதை விட, பொறுமையால் ஒருவன் அதிகம் சாதிக்கிறான்.
-ஆப்ரிக்கா.

படும்பாடு ஆண்டவனுக்குத்தான் தெரியும். இவருடைய மனைவி ஐயோ பாவம்.

ஒருசமயம் பொறுக்க முடியாமல் அவர் இல்லாத சமயம், அவரது மனைவியிடம், "எங்களால் ஒருநாள் கூட இவரை பொறுக்க முடியவில்லையே. நீ எப்படி இவரோடு காலம் பூரா குடித்தனம் செய்கிறாய்? அந்த ரகசியத்தை கொஞ்சம் சொல்லேன்?" என்று கேட்டேன். அதற்கு அந்த அம்மாள், "எனக்குப் பழக்கமாகி விட்டது. அத்துடன் இவர் பேசுவதை யார் கேட்பார்கள்? ஏதோ 'சோ'வென்று மழை பெய்கிறது என்று நினைத்துக் கொள்வேன். வர வர இவருடைய சப்தம் கேட்காவிட்டால் (கவனிக்க, 'சப்தம்'), ரொம்ப போர் அடிக்கிறது" என்றார்.

இப்பொழுதெல்லாம் அவர் என் வீட்டுக்கு ஊரிலிருந்து வந்தால், "இதோ பாருங்கள். பிரமாதமாக எழுதியிருக்கிறார். அந்தப் புத்தகத்தைப் பாருங்கள்" என்று மூன்று, நான்கு புத்தகங்களை அவர் முன்னே வைத்துவிட்டு, "இதோ வந்துவிடுகிறேன்" என்று கூறிவிட்டு கம்பியை நீட்டிவிடுவேன். பிறகு சாப்பாட்டு நேரத்துக்குத்தான் திரும்புவேன். இதிலும் இடி விழுந்து விட்டது. இப்படி, நான் இரண்டுமூன்று தடவை செய்ததும் அதைப் புரிந்து கொண்டுவிட்டார். அவர் மனைவியிடம், "நாம் அங்கு போவதே அவரிடம் பேசுவதற்காகத்தான். இப்பொழுதெல்லாம் அவருக்கு தன்னைப் பிடிப்பதில்லை".

இப்பொழுது நான் வேறு என்ன யுக்தியை கையாளுவது என்று யோசனை செய்துகொண்டிருக்கிறேன். உங்களுக்கு ஏதாவது தோன்றினால், எனக்குத் தெரிவியுங்களேன். நிச்சயம் உங்களுக்கு சொர்க்கம்தான். அப்படிப்பட்ட புண்ணியம் இது.

எனக்குத் தெரிந்த ஒரு மனநல வைத்திய நண்பர் இருக்கிறார். அவரை ஒரு சமயம் சந்திக்கும் பொழுது, இவரைப் பற்றிக் கூறி, "ஏதாவது மாத்திரை கிடைக்குமா? அவருடைய வாயை அடைக்க" என்று கேட்டேன் அவரும் கையை விரித்துவிட்டார். "இது பிறவிக்கோளாறு. ஒன்றும் செய்ய முடியாது. ஒன்று சகித்துக் கொள்ளுங்கள். இல்லையென்றால், அவர் வருகிறார் என்று தெரிந்ததும், துணியைக் காணோம், துண்டைக் காணோம் என்று



படிப்பகம்

www.padippakam.com



கொல்லைப்பக்கமாக ஓடி எங்கேயாவது ஒளிந்து கொள்ளுங்கள். அவர் சென்ற பிறகு, திரும்பி வீட்டுக்கு வாருங்கள். வேறு வழி இல்லை" என்றார். இது கற்பனை இல்லை. உண்மை, உண்மை, உண்மை.

இப்படிப்பட்டவர்கள் உங்கள் நேரத்தையும் கெடுத்து, தன் நேரத்தையும் கெடுத்துக் கொள்ளுபவர்கள். எந்தக் காரணம் கொண்டும் இப்படிப்பட்டவர்களை நண்பர்களாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளாதீர்கள்.

## 2. பிறரைப் பற்றி எப்பொழுதும் குறை பேசுபவர்கள்

இப்படிப்பட்டவர்களிடம், தங்களைப் பற்றிய உயர்வு மனப்பான்மை (Superiority Complex) மிக அதிகமாக இருக்கும். தனக்கு எல்லாம் தெரியும் என்ற ஒரு அகந்தை (Ego) அதிகமாகவே இருக்கும். இவர்கள் வாயைத் திறந்தாலே 'அவன் இப்படி, இவன் அப்படி' என்பதைத் தவிர வேறு எதையும் பேச மாட்டார்கள். இந்த மனநிலையை உடையவர்களால், தன் குற்றம் என்னவென்று உணர்ந்து, ஒருக்காலும் தன்னைத் திருத்திக் கொள்ள மாட்டார்கள்.

இவர்கள் எப்பொழுதும் கடுமையான முகத்தோடும், கோப உணர்வோடும்தான் இருப்பார்கள். என் சொந்தத்தில் பெரியவர் ஒருவர் இருந்தார். அவர், தன் வேலைக்காரர்கள் வேலையை நன்றாகச் செய்தாலும் திட்டுவார்; சரியாகச் செய்யவில்லை என்றாலும் திட்டுவார். ஒருநாளில், எப்படியாவது யாரையாவது திட்ட வேண்டும். அப்படி யாருமே இல்லாவிட்டால், பழைய நிகழ்ச்சி ஏதாவதை நினைத்துக்கொண்டு, திட்டிக்கொண்டிருப்பார். இதுபோன்ற குணம் கொண்டவர்களிடம் எக்காரணத்தைக் கொண்டும் பழகித் தொலைக்காதீர்கள். ஏனென்றால், இவர்கள் உங்களையும் நாளைக்குத் திட்டுவார்கள்.

விமர்சனம் (Critisism) என்பது இந்த வகையைச் சேர்ந்தது தான். ஆனால், அதில் பொதுவாக ஒரு நியாயம் இருக்கும். நல்லது, கெட்டதை அறிவுபூர்வமாகச் சிந்தித்து, சீர்தூக்கிப் பார்க்கும் புத்திசாலித்தனம் இருக்கும். இப்படிப் பேசுபவர்களது நட்பு மிகவும் தேவை. இவர்கள் மிகுந்த அனுபவசாலிகளாக இருப்பார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

> ஒரு நிமிடக் கோபம் ஓரா
> யிரம் வருடப் புகழையும்
> அழித்து விடும்.
> -இலங்கை

உங்களுடைய குற்றங்குறைகளை ஆராய்ந்து, தக்க நேரத்தில் புத்திமதி கூறி உங்களை நல்வழிப்படுத்துவார்கள்.

ஆகவே, எப்பொழுதும் பிறரைக் குற்றம் சொல்லுபவர்கள் வேறு, விமர்சனம் செய்பவர்கள் வேறு. கேட்பதற்கு இரண்டும் ஒன்று போலவே இருக்கும். ஆனால் சற்று ஆழ்ந்து பார்த்தால், வித்தியாசம் தெரியும்.

இப்படி ஆக்கப்பூர்வமான விமர்சனம் செய்பவர்களே, 'இடுக்கண் களையும் மனப்பாங்கு' உடையவர்கள். இவர்கள் தேவையானால் மட்டும் அடுத்தவர்களைப் பற்றி சற்று எச்சரிக்கையாகப் பேசுவார்கள். தேவை இல்லாமல் அடுத்தவர்களைப் பற்றி ஒருக்காலும் பேசமாட்டார்கள்.

## 3. முகத்தில் இனிமை, அகத்தில் வஞ்சம் நிறைந்தவர்கள்

இவர்களே வஞ்சக மனம் படைத்தவர்கள். யார் குடியைக் கெடுக்கலாம் என்று எப்பொழுதும் கணக்குப் போட்டுக் கொண்டே இருப்பார்கள். இவர்கள் ஒரு ஆளிடம் பழகுகிறார் என்றால், அந்த ஆளை அழிப்பதற்காகவே இருக்கும். இந்தக் கொடிய மனிதர்களை அடையாளம் காணுவது அவ்வளவு சுலபமல்ல. மனத்தில் திண்மை இல்லாதவர்கள்; சிந்திக்கும் திறன் இல்லாதவர்கள்; இவர்கள் வலையில் சுலபமாக மாட்டிக் கொள்ளுவார்கள்.

இப்பொழுது உள்ள தொலைக்காட்சி சீரியல்களில், இந்தப் பாத்திரங்கள்தான் கதையை நகர்த்திச் செல்லுகிறது. ஒருநாளில் சுமார் 20 சீரியல்கள் போட்டால், சுமார் 15 சீரியல்களில் இப்படிப்பட்ட பாத்திரம்தான் முக்கிய அங்கம் வகிக்கிறது. இது ஏன் பார்ப்பவர்களுக்குப் புரியவில்லை என்பது எனக்கு ஆச்சரியமாகவே இருக்கிறது. மக்கள் சிந்திக்கும் திறனை இழந்து, ஏதோ இயந்திரத்தனமாக வாழ்க்கை நடத்துகிறார்கள். இதனால் என்ன ஆகிறது தெரியுமா? இவற்றைப் பார்க்கும் பெண்களின் மனநிலை பாதிக்கப்பட்டு, நாமும் அப்படி நடந்து கொள்ளலாம் என்ற விபரீத புத்தி ஏற்படுகிறது. அது மாத்திரமல்ல; நல்லவர்களையும் சந்தேகிக்கும் மனப்பான்மை மேலோங்குகிறது.



படிப்பகம்

www.padippakam.com

**பழமொழி**

எந்த தவறை நீ எங்கு கண்டாலும் அதை உன்னிடம் திருத்திக் கொள்.

**-இங்கிலாந்து**

இது எச்சரிக்கை உணர்வை ஊட்டுகிறது என்று ஒருசிலர் கூறலாம். இவர்கள் சற்று சுயமாகச் சிந்திக்கத் தெரிந்திருக்க வேண்டும். இவர்கள்தான் சற்று எச்சரிக்கை உணர்வோடு இருப்பார்கள்.

ஆகவே வாசகர்களே, தோற்றத்தைக் கண்டு மயங்கிவிட வேண்டாம். அதைப் போல பேச்சின் இனிமையை வைத்து மட்டும் ஒரு ஆளை எடை போட்டு விடாதீர்கள். பொதுவாக ஆரம்பத்தில் எல்லோரிடமும் சற்று எச்சரிக்கை உணர்வோடு, பட்டும் படாமலும் பழகுங்கள். அவர்களுடைய ஆழ்ந்த குணாதிசயங்களை பல நேரங்களில் கவனியுங்கள். யாருடைய உதவியையும் ஆராயாமல் ஏற்றுக் கொள்ளாதீர்கள். அப்படி ஏற்றுக்கொண்டுவிட்டால், நீங்கள் அவர்கள் விரித்த வலையில் சிக்கிக் கொண்டீர்கள் என்று அர்த்தம்.

இந்த மூன்றாவது ரக மனிதர்கள், இப்படித்தான் வலை விரிப்பார்கள். பெரும்பாலும், வலிய வந்து உதவி செய்வார்கள். ஜாக்கிரதை. எவ்வளவு இக்கட்டான நேரத்தில் உதவிக்கு வந்தாலும், தயவு செய்து ஏதோ காரணம் சொல்லி மறுத்து விடுங்கள். இல்லாவிட்டால், பெருந்துன்பத்திற்கு ஆளாவீர்கள்.

## 4. முன்கோபம் உள்ளவர்கள்

பொதுவாக முன்கோபம் உள்ளவர்களுக்கு அறிவு சற்று தூக்கலாக இருக்கும். ஆனால் புத்திசாலித்தனம் குறைவாக இருக்கும். அறிவு என்பது தன்னை ஆழ்ந்து புரிந்து கொள்ளுதல். புத்திசாலித்தனம் என்பது சூழ்நிலைக்கு ஏற்ப நடந்து கொள்ளுதல். ஒரு அறிவு மிகுந்தவன், பிறரிடம் நல்ல பெயர் வாங்குவது கஷ்டம். புத்திசாலித்தனம் உள்ளவன் எதற்கும் வளைந்து கொடுத்து முன்னேறும் தன்மையுள்ளவன். இவன்தான் வாழ்க்கையில் பல வெற்றிகளைக் குவிப்பான். புத்திசாலிகளுக்குப் பெரும்பாலும் முன்கோபம் வருவதில்லை. இவர்களை நண்பர்களாக ஏற்றுக் கொள்ளுவது புத்திசாலித்தனம்.

ஆனால், அறிவுள்ளவர்களை ஒரு சிக்கலான காரியத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளலாமே தவிர நண்பர்களாக ஆக்கிக் கொள்ளுவது அவ்வளவு புத்திசாலித்தனம் இல்லை. ஏனெனில்,



படிப்பகம்

www.padippakam.com

**பழமொழி**

சுயநலம் என்ற நெருப்பானது, முதலில் மற்றவர்களைப் புசிக்கிறது; பின்னர் தன்னையே புசிக்கிறது.

-ரஷ்யா.

இவர்களுக்கு எப்பொழுது கோபம் வரும், எப்பொழுது சாந்தமாக இருப்பார்கள் என்று கூறமுடியாது. இதைப் போலத்தான் முட்டாள்களுக்கும் முன்கோபம் வரும். இப்படிப்பட்டவர்களை ஆரம்பத்திலேயே இனம் கண்டு கொண்டு தவிர்க்க வேண்டும்.

அறிவாளிகள், பெரும்பாலும் புத்திசாலிகளாக இருப்பதில்லை என்பதற்கு இராஜாஜியே உதாரணம். மிகச் சிறந்த அறிவாளியான இராஜாஜி, தான் முதன் மந்திரியாக இருந்தபொழுது, குலக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தார். அதுவே அவருக்குக் குழிபறித்துவிட்டது. இப்பொழுது உள்ளவர்களுக்கு அது புரியாமல் இருக்கலாம். அதற்காக அதைச் சுருக்கித் தருகிறேன்.

தகப்பன் செய்த வேலையைப் பாதி நாள் மகன் கற்றுக் கொண்டு, பாதி நாள் பள்ளிக்கு செல்லவேண்டும். இதுதான் குலக் கல்வித் திட்டத்தின் அடிப்படைக் கருத்து. இது பல சர்ச்சையை கிளப்பி, தமிழகத்தில் பூகம்பமே வெடித்தது. திட்டம் என்னமோ சரியானது போலத் தோன்றினாலும், நடைமுறையில் சாத்யம் இல்லை. ஏனெனில், கீழான நிலையில் உள்ளவன் மேலான நிலைக்கு வரவே முடியாது. இது பிற்பாடு பல பிரச்சினைகளை ஏற்படுத்திவிடும். இதை ஏன் அந்த அறிவாளி சிந்திக்கவில்லை என்று தெரியவில்லை. அத்துடன் அவரது அரசியல் வாழ்வு அஸ்தமனமாகிவிட்டது.

ஆனால், எல்லா அறிவாளிகளும் முன்கோபம் உடையவர்களாக இருப்பார்கள் என்று கருத வேண்டாம். அதைப் போல புத்திசாலிகளிலும் முன்கோபக்காரர்கள் உண்டு. எல்லாவற்றிற்கும் விதி விலக்கு உண்டு. விதி விலக்கு என்பது பொது விதியாகாது. ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்.

அறிவாளிகளில் சூழ்ச்சி நிறைந்தவர்கள் அதிகம். ஏனெனில் அவர்கள் மூளை அபாரமானது. இதற்கு ஒரே உதாரணம் சாணக்யன். ஆகவே, எப்பொழுதுமே அறிவாளிகளிடம் உஷாராகவே இருங்கள். பெரும்பாலும் அறிவாளிகளிடம் புத்திசாலிகளை விட மனிதாபிமானம் குறைவாகவே இருக்கும். எல்லாவற்றிலும் ஒரு நேர்மையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று



படிப்பகம்

www.padippakam.com

பழமொழி

நம்பிக்கை எதையும்
துணிந்து செய்கிறது;
அன்பு எதையும்
பொறுத்துக் கொள்கிறது!
-அமெரிக்கா.

எதிர்பார்ப்பார்கள். இதனால் பல இன்னல்களுக்கு அளாவார்கள். வாழ்க்கையில் சற்று வளைந்து கொடுக்கும் தன்மை வேண்டும். அந்த வளைந்து கொடுத்தல், மனிதாபிமான அடிப்படையில் இருக்க வேண்டும். அதுவும் ஓரளவுதான் இருக்க வேண்டும். இதற்கெல்லாம் சற்று அனுபவம் வேண்டும்.

## 5. அவசரக்காரர்களும் ஆத்திரக்காரர்களும்

இவர்களை நண்பர்களாக்கிக் கொண்டால், இவர்களால் பயனைத் தவிர, தொல்லைகள்தான் அதிகம் வரும். ஒன்றை நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள். அவசரம் வேறு, சுறுசுறுப்பு வேறு. சுறுசுறுப்பு என்பது ஒரு காரியத்தில் திட்டமிட்டு, விரைவாகச் செயல்படுவது. இந்த வேலையில் ஒழுங்கு இருக்கும். அவசர புத்தியும், ஆத்திர புத்தியும் உள்ள நண்பர்களிடம் ஒரு வேலையைச் சொன்னால் வேலையும் சுத்தமாக இருக்காது. மற்றும் உங்களை சில சமயம் சிக்கலிலும் மாட்டி விட்டுவிடுவார்கள். ஏனென்றால், இவர்களிடம் வேகம் இருக்கும் அளவுக்கு விவேகம் இருக்காது. இதுதான் பிரச்சினை. இப்படிப்பட்டவர்களால் என்ன பயன்?

ஒரு நண்பன் என்றால், உங்களுக்கு ஏதாவது ஒரு வகையில் பயனளிக்க வேண்டும். அப்படி ஏதும் தெரியாமல் இப்படிப் பட்டவர்களை நண்பர்களாக்கிக் கொண்டால், நிலைமை முற்றுவதற்குள், எப்படியாவது இவரை கழட்டி விட்டுவிடவும். நீங்களாக யாரையும் திருத்த முற்படாதீர்கள். ஏனென்றால், மேலோட்டமான, சமீபத்தில் படிந்த பழக்கத்தை புத்திசாலி ஓரளவு திருத்தி விடலாம். ஆனால் பரம்பரையாகவும், பல காலமாகவும் வரும் பழக்கங்களை புத்தி சொல்லி ஒருக்காலும் திருத்த முடியாது. இப்படிப்பட்டவர்களுக்கு நீங்கள் புத்தி சொன்னால், அவர்கள் திருந்துவதற்கு மாறாக, தங்கள் குணத்தையும், நடத்தையையும் நியாயப்படுத்தவே முயலுவார்கள். ஜாக்கிரதை.

அதைப்போலவே இவர்களையும் திருத்த முயலாதீர்கள். இவர்கள் ஒருக்காலும் தங்கள் அவசரப்புத்தியை ஒத்துக் கொள்ள மாட்டார்கள். இவர்கள் அதைச் சுறுசுறுப்பு என்று எடுத்துக் கொள்ளுவார்கள். இவர்களிடம் படபடப்பும் அதிகமாக இருக்கும்.



படிப்பகம்

www.padippakam.com

**பழமொழி**

என் நாக்கு சத்தியம் செய்தது; ஆனால், என் உள்ளம் அதைச் செய்ய வில்லை!

-பெர்சியா (ஈரான்)

படபடப்பு அதிகமாக இருப்பவர்களிடம், எந்த வேலையையும் நம்பிக் கொடுக்காதீர்கள். இவர்கள் தவறுதலாக ஒரு வேலையைச் செய்துவிட்டு, பொய் வேறு சொல்லுவார்கள்

இவர்களையெல்லாம் தவிர்ப்பதே நல்லது.

## 6. நட்பிலும் வியாபாரத்தனம் உடையவர்கள்

எனக்குத் தெரிந்த ஒருவர், மிகப் பெரிய பணக்காரர். அவர் எல்லோரிடத்திலும், குழைந்தும், பணிவாகவும் பேசுவார். எல்லோரும் அவரை மிக நல்லவர் என்றே ஆரம்பத்தில் கருதினார்கள். ஆனால் பழகப் பழகத்தான் அவர் உள்ளத்தில் உள்ள வியாபாரத்தனம் புரிந்தது. அதாவது, உங்களோடு அவர் குழைந்து பேசுகிறார் என்றால், உங்களால் ஏதோ காரியம் ஆக வேண்டியிருக்கிறது என்று அர்த்தம். அப்படி இல்லாவிட்டால், சாதாரணமாக அவர் பிறரிடம் முகம் கொடுத்துப் பேசமாட்டார்.

அதைப் போல, உங்களிடமிருந்து காரியம் முடிந்து விட்ட பிறகு, ஏதாவது சொற்பமாகச் செய்துவிட்ட உங்களை வாயாரப் புகழ்ந்து தள்ளுவார். அவ்வளவுதான். நீங்கள், 'ஆஹா எவ்வளவு நல்ல மனிதர். எவ்வளவு நன்றி உள்ளவர்' என்று நினைத்து விடுவீர்கள். பிறகு ஒருசமயம் அவரைச் சாதாரணமாகப் பார்க்கப் போனாலும் சரியாகப் பேசமாட்டார். சீக்கிரம் உங்களை வழி அனுப்புவதிலேயே குறியாக இருப்பார். இதைவிட மோசம் என்னவென்றால், பிறகு நீங்கள் அவரைச் சந்தித்து ஏதாவது சிறுஉதவி கேட்டாலும் உடனே மறுத்துவிடுவார். சிலசமயம் அப்படி உதவி கேட்பவரிடம், 'நீங்கள் முன்பு எனக்கு ஒரு காரியம் செய்து கொடுத்தீர்கள். அதற்கு அப்பவே சன்மானம் கொடுத்து கணக்கைத் தீர்த்து விட்டேன். அவ்வளவுதான். மேற்கொண்டு என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள்' என்பார்.

இப்படிப்பட்ட வியாபாரிகளோடு நட்பு வைத்திருந்தால் என்ன ஆகும்? சற்று யோசித்துப் பாருங்கள். உங்களிடம் சில உதவிகளைப் பெற்றுவிட்டு, அதற்கு உடனே உங்கள் கணக்கைத் தீர்த்துவிட்டு, பிறகு நீங்கள் சென்றால், உங்களை 'யார் நீங்கள்?' என்று கேட்பார். இவர்களது நட்பு தேவைதானா?



படிப்பகம்

www.padippakam.com

நியாயத்தைக் கடைப்பிடிப்ப
வன் பொறாமையின் மத்தியிலும்
மேலாக விளங்குவான்.

இப்படிப்பட்டவர்களுக்கு உதவி செய்துதான் ஆகவேண்டுமா? சிந்தியுங்கள்.

ஆகவேதான் உதவியைவிட உதவி செய்பவரை முக்கியமாக எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. இப்படி உதவி செய்பவர்களில் இன்னொரு ரகமும் உண்டு. இவர்கள் உங்களுக்கு உதவி செய்துவிட்டு, நம்மிடமிருந்து பெருந்தன்மையாக எதையுமே எதிர்பார்க்க மாட்டார்கள். ஆனால், அதற்கு மாறாக ஒவ்வொருவரிடமும் சென்று, 'நான்தான் அவருக்கு இதைச் செய்தேன். அதைச் செய்தேன்' என்று தம்பட்டம் அடிப்பார். இது கிட்டத்தட்ட நம்மை இழிவுபடுத்துவதற்குச் சமம் என்று ஏன் அவருக்குப் புரியவில்லை? 'ஒரு கை கொடுப்பது அடுத்த கைக்குத் தெரிய வேண்டாம்' என்று சொல்லுவது, இவரைப் பொறுத்தவரையில் வீண்தான்.

இப்படிப்பட்டவர்களின் நட்பு தேவையா?

## 7. புறங்கூறும் சிறுமைத்தனம் படைத்தவர்கள்

உங்களிடம் ஒருவர் உயிர் நண்பராகும் எண்ணத்தில் வருகிறார். அவர் உங்கள் நம்பிக்கையைப் பிடிக்க சில முறைகளைக் கையாளுவார். அதில் ஒன்றுதான் பிறரைப் பற்றி சில இரகசிய விஷயங்களைச் சொல்லுவது. ஆரம்பத்தில் அவர் சொல்லும் விஷயங்களை நீங்கள் நம்பாமல் இருக்கலாம். அது சரிதானா என்று கூட வேறு ஒரு ஆள் மூலம் சோதனை செய்யலாம். அப்பொழுது அது சரியாகவே இருக்கும். இது உங்களுக்கு அவர்மேல் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தும். இப்படி மெல்ல மெல்ல அவர் உங்களை நெருங்கி விடுவார்.

பிறகு உங்களுக்குப் பிடிக்காதவர் மேல் இல்லாததையும், பொல்லாததையும் சொல்ல ஆரம்பித்து விடுவார். அந்தப் பிடிக்காதவர், ஒரு நேரம் உங்களுடைய மிகச்சிறந்த நண்பர்களில் ஒருவராக இருந்திருப்பார். ஏதோ சிறு காரணத்திற்காக, அவருக்கு உங்கள்மேல் வருத்தம் இ[illegible]கலாம். அல்லது நீங்கள் அவர்மேல் வருத்தமாக இருப்பீர்கள். இப்படி சிறு மனஸ்தாபம் வந்தாலே உடனே ஒரு நல்ல [illegible]டியேட்டரை வைத்து அதைப் பேசித் தீர்த்துக்



படிப்பகம்

www.padippakam.com



கொள்ள வேண்டும். இந்த அலட்சியப் போக்கால் நீங்களும் அவரும் பரஸ்பரம் ஒரு நல்ல நண்பரை இழக்கிறீர்கள். இது நீங்கள் இருவரும் செய்த முட்டாள்தனம்.

இப்பொழுது இந்தப் புறங்கூறும் நண்பர், உங்களுடைய நட்பை நிரந்தமாகப் பிரிக்கப் பார்க்கிறார். இதற்கு நீங்கள் இடம் கொடுத்தால், நீங்கள் வருங்காலத்தில் பல இடர்ப்பாடுகளைச் சந்திக்க நேரிடும்.

அது மாத்திரமல்ல. இப்பொழுது அந்த நண்பர் உங்களிடம் இருக்கிறார். ஏதோ காரணத்திற்காக, நீங்களே அவரை வெளியேறச் சொல்லலாம். அல்லது அவரே உங்களை விட்டுப் பிரிய நேரிடலாம். பிறகு அவர் வேறு ஒரு இடத்தில் சேர்ந்துகொண்டு என்ன செய்வார் தெரியுமா? உங்களைப் பற்றி 'அது, இது' என்று கோள்மூட்டி இன்னும் சில நண்பர்களை உங்களிடமிருந்து பிரிக்கப் பார்ப்பார். ஏனென்றால், அவர் சுபாவமே அப்படித்தான். அவரால் அதை ஒருக்காலும் மாற்றிக் கொள்ள முடியாது.

இப்படி இவர் ஒரு நிரந்தரத் தலைவலியாக மாறி விடுவார். இது தேவைதானா? ஆரம்பத்திலேயே, பிறரைப் பற்றி உங்களிடம் சொல்லும் பொழுதே, உஷாராகி அவரை மெல்ல உங்களிடமிருந்து விலக்கி விட வேண்டும். இப்படிப் பட்டவர்களுக்கு கொஞ்சம் இடம் கொடுத்தால், மடத்தையே பிடுங்கி விடுவார்கள்.

இதனால் அவரும் முன்னேற முடியாது. ஏனெனில், இவரது இந்தக் குணத்தை தாமதமாக உணர்ந்தவர்கள் கூட இவருக்கு உதவி செய்ய மறுப்பார்கள். பிறகு இவர் தெருவில் நிற்க வேண்டியதுதான்.

## 8. மிகுந்த தற்புகழ்ச்சி உள்ளவர்கள்

நீங்கள் விலக்க வேண்டிய நண்பர்களில் இவரும் ஒருவர். ஏனெனில், பொய் சொல்லுவதில் இவர்கள் கில்லாடிகள். ஆள் கிடைத்தால் மலையைக் கயிறாகத் திரிப்பேன் என்று கூட கூறுவார்கள்.

**பழமொழி**

வாழ்க்கை என்பது சந்திரன் போன்றது; சில சமயம் இருட்டும்; சில சமயம் முழு நிலவாக இருக்கும்.

படிப்பகம்

www.padippakam.com

துரும்பாகத் தேய்ந்தாலும் சந்தனக் கட்டை மணம் மாறாது!

**-இந்தியா**

என்னுடைய உறவினர் ஒருவர், 1954-ஆம் வருடம், இடைநிலை வகுப்புப் படித்தார் (Intermediate) ஆனால் அவர் அதில் தேறவில்லை. மறுபரிட்சை எழுதி அதைப் பூர்த்தி செய்வதற்குள், ரயில்வேயில் வேலை கிடைத்துவிட்டது. அதுதான் சாக்கு என்று டெல்லிக்குப் பறந்துவிட்டார். வேலைதான் கிடைத்து விட்டதே? பிறகு எதற்கு தேர்வெழுதி பாஸ் பண்ண வேண்டும்? இந்த விஷயம் எனக்கும் இன்னும் சிலருக்கு மட்டும்தான் தெரியும். ஆனால் அவர் உற்றார், உறவினர்களிடமும் நண்பர்களிடமும்கூட தான் பாஸ் செய்து விட்டதாகவே கூறிக் கொண்டிருக்கிறார். இப்பொழுது அவருக்கு வயது 67.

இந்தத் தற்புகழ்ச்சிக்காரர்கள் கற்பனை வளம் மிகுந்தவர்கள். இதனால் என்ன பிரச்சினையென்றால், இரண்டு நிமிடத்தில் சொல்ல வேண்டிய சேதியை, சுமார் 20-30 நிமிட நேரம் வளர்த்துவார்கள். அந்தச் சாதாரண செய்திக்கு கை, கால்கள் வைத்து அப்படி, இப்படி என்று அளப்பார்கள். இது ஆரம்பத்தில் கேட்பவர் களுக்கு, உற்சாகமூட்டும். ஆனால் போகப் போக இவருடைய வண்ட வாளம் புரிய ஆரம்பித்து விடும். எப்படியென்றால், சென்ற வருடம் அதே நபரிடம் அவர் வேறு மாதிரியாகச் சொல்லி யிருப்பார். அடுத்த வருடம் அதே நபரிடம் அதே செய்தியை இன்னொருவிதமாகச் சொல்லுவார். இப்பொழுது ஆரம்பத்தில் கற்பனை செய்தது மறந்து போயிருக்கும். புது மாதிரியாக 'ரீல்' விடுவார். பிறகு என்ன? ஒவ்வொருவராக அவரிடமிருந்து கழட்டிக் கொண்டே ஓடி ஒளிய ஆரம்பித்து விடுவார்கள்.

இப்படிப்பட்டவர்களை நீங்கள் நண்பனாக அடைந்து என்ன பயன்? உங்களைப் பற்றியும் கற்பனையாகப் பிறரிடம் கதைதான் அளப்பார். இதனால் உங்கள் மதிப்பு நிச்சயமாகக் கெடும். தான் தான் உங்களுக்கு இந்தக் காரியத்தில் உதவி செய்ததாகவும், உங்களுக்கு உலக ஞானம் அவ்வளவு போதாது. நான்தான் அவருக்கு அந்தரங்க நண்பன். என்னைக் கேட்காமல் எந்த முடிவும் எடுக்க மாட்டார்... அப்படி, இப்படி என்று கதை அளப்பார்.

இதனால் உங்களை உண்மையிலேயே புரிந்து கொண்டவர்கள் நம்பாமல் இருக்கலாம். பாக்கிப் பேர்கள்? இவர்களிடம் சென்று நீங்கள், நான் அப்படி இல்லை என்று கூற



படிப்பகம்

www.padippakam.com

**பழமொழி**

நல்லவர்க்கும், தங்கத் திற்கும் சோதனை அதிகம்.
-தமிழ்நாடு.

முடியுமா? இதற்குப் பெயர்தான் 'கிசு கிசு' இந்த வார்த்தை சினிமா உலகத்தில் பிரபலம். இந்தக் கிசுகிசுவுக்கு காரணமானவர்களே அப்படிப்பட்ட தற்புகழ்ச்சிக்காரர்கள்தான்.

இவர்களை ஆரம்பத்திலேயே 'கட்' செய்யுங்கள். இப்படிப்பட்டவர்கள் பொய்யும், மெய்யும் கலந்து பேசுவதில் வல்லவர்கள். அப்பொழுது பொய்யும், மெய் போலவே தோற்றமளிக்கும். இவர்கள் மிகவும் அபாயகரமானவர்கள். ஆகவே இதுபோன்ற நபரிடம் கவனமாக இருங்கள்.

## 9. அற்பத்தனமாக வாதிடுபவர்கள்

சில பேருக்கு பழமையில் மோகம் அதிகம். 'அந்தக் காலத்தில்' என்று ஆரம்பித்தால், சகலத்தையும் புகழ்ந்து கொண்டே இருப்பார்கள். அந்தக் காலத்துப் பொருள்கள் எல்லாம் உயர்ந்தது என்ற நினைப்பு. இப்படிப்பட்ட மனிதர் ஒருவர், என்னுடைய நெருங்கிய உறவினர். இவரோடு பல சந்தர்ப்பங்களில் மோதல் வெடிக்கும். கடைசியில் வருத்தம்தான் மிஞ்சும். என்ன செய்வது?

இவருக்கு அந்தக் கால சித்த வைத்தியம், ஆயுர்வேதம் போன்றவற்றில் அசைக்க முடியாத நம்பிக்கை. இதனால் அவர் தன் ஒரு கண்ணையே இழக்க நேர்ந்தது. சித்த வைத்தியம் என்ற பெயரில் எதை எதையே கண்ணில் பிழிந்து, 'சரியாகி விடும், சரியாகி விடும்' என்று நாள் கடத்திவிட்டார். அவருக்குக் கண்ணீர் அழுத்த நோய் (Glycoma) இதனால் கண் பாதிக்கப்பட்டு நிரந்தரமாக ஒரு கண்ணில் பார்வையை இழந்தார். எனக்கு நம் நாட்டு வைத்தியத்தைப் பற்றி அவ்வளவு நல்ல அபிப்பிராயம் இல்லை. காரணம் அவற்றுக்கு விஞ்ஞான ரீதியான மற்றும் புள்ளி விவர (Statics) அடிப்படை இல்லை. ஏதோ சில வியாதிகளுக்கு அது சரிப்பட்டு வந்திருக்கலாம். அதற்காக நான் அதைக் குறைகூறவில்லை. அவற்றை நவீன முறைப்படி பரிசோதனை செய்து உறுதிப்படுத்த வேண்டும் என்றுதான் சொல்லுகிறேன். அதற்கு அவர், 'உங்களுக்கு நம் நாட்டு மருத்துவத்தில் நம்பிக்கை இல்லை. நீங்களெல்லாம் மேல்நாட்டு மோகிகள். நவீன



படிப்பகம்

www.padippakam.com

பணத்திடம் நம்பிக்கை வைக்காதே; நம்பிக்கையிடம் பணத்தைப் போட்டு வை.
-பெர்சியா.

மருத்துவத்தில் எவ்வளவு பின் விளைவுகள், பக்க விளைவுகள் வருகிறது. தெரியுமா?" என்று கண்டபடி திட்டுவார்

கடைசியில், பல வியாதிகளுக்கு, எல்லாவற்றையும் பார்த்துவிட்டு நவீன மருத்துவத்திற்குத்தான் வந்தார். இப்படிச் சிலர் விஞ்ஞான பூர்வமாக நிரூபித்ததைக் கூட நம்ப முடியாது என்பார்கள். சந்திரனில் இன்னும் மனிதன் செல்லவில்லை என்று கூறுபவர்கள் இன்னும் இருக்கிறார்கள். இந்த உலகம் ஒன்றைச் சரி என்று ஒப்புக் கொண்டதை, இவர்கள் தவறு என்று கூறி மகிழ்வார்கள். அதற்குச் சாதகமாக இல்லாததையெல்லாம் கொண்டு வருவார்கள்.

இப்படிப்பட்டவர்களை நீங்கள் நண்பர்களாக ஏற்றுக் கொண்டால், இவரோடு வாதம் செய்தே உங்கள் சக்தியைச் செலவழித்து விடுவீர்கள். அத்துடன் உங்களுடைய விலைமதிக்க முடியாத நேரம் என்னவாவது?

இந்த வாதப் பிரியர்களை ஓரிரு தடவைப் பார்த்துவிட்டு, மெல்ல கழட்டி விடவும். இவரை யாரிடமாவது ஒரு காரியத்துக்காக அனுப்பினால், அங்கேயும் சென்று விதண்டாவாதம் செய்து, காரியத்தை முழுமையாகக் கெடுத்துவிட்டுத்தான் வருவார். இப்படிப்பட்டவர்கள் உங்களுக்கு நண்பனாக இருப்பதைவிட, நண்பனே இல்லாமல் இருப்பது மேல்.

## 10. ஒழுக்கமற்றவர்கள்

இப்படிப்பட்டவர்கள் சினிமா உலகத்தில் மிக அதிகம். இவர்களிடம் பல நற்குணங்கள் இருக்கலாம். ஆனால் இரவு பத்து மணிக்கு மேலே ஆளே மாறி விடுவார்கள். இவர்களை எல்லா விஷயத்திற்கும் நம்பலாம். இரவு நேரத்தை தவிர.

ஆனால், நீங்கள் எப்படியாவது இவரது வலையில் விழுந்து விடுவீர்கள். ஒருவனிடம் மது, மாது பழக்கம் இருந்தால், தயவு செய்து ஆரம்பத்திலேயே 'கட்' செய்து விடுங்கள். இவர்கள் உங்களோடு நெருங்கிப் பழகி, உங்களுக்குத் தக்க தருணத்தில் பல நல்ல உதவிகளைச் செய்து, உங்களுடைய 'மூடை' கவனித்து



படிப்பகம்

www.padippakam.com



வைத்திருப்பார்கள். உங்களுடைய ஒழுக்கக் குணங்களில் சற்று தொய்வு ஏற்பட்டால், இவர்கள் உடனே அதைப் புரிந்துகொண்டு விடுவார்கள். இப்படிப்பட்டவர்கள் சினிமா உலகத்தில் மாத்திரமல்ல; வெளி உலகத்திலும் நிறைய பேர் இருக்கிறார்கள்.

உங்களுடைய துர்அதிர்ஷ்டம், இவர்களில் ஒருவரை நண்பராக்கிக் கொண்டால் அவ்வளவுதான். எப்படியும் உங்களை வீழ்த்தி விடுவார்கள். இவர்களிடமிருந்து தப்புவதற்கு மிகுந்த மன உறுதி வேண்டும்.

என்னுடைய ஒன்றுவிட்ட சித்தப்பா, தனி ஆளாக தஞ்சையிலிருந்து சென்னைக்கு வந்து, பெரும் வியாபாரியாகி ஏகப்பட்ட சொத்துக்கள் சேர்ந்தார். முருக பக்தர். வீட்டில் முருகன் படங்களைத் தவிர வேறு எதுவும் இருக்காது. வாய்க்கு வாய் 'முருகா நாமம்' தான். பிறகு சுமார் 40 வயது காலகட்டத்தில், ஒரு நண்பர் வந்து சேர்ந்தார். அவர் மேற்சொல்லிய ரகம். மெதுவாக என் சித்தப்பாவைக் கரைத்து, கோடம்பாக்கம் பக்கம் கூட்டிச் சென்று விட்டார். பிறகு என்ன? மெல்ல மெல்ல மது, மாது, புகைப்பழக்கம் எல்லாம் ஏற்பட்டு விட்டது. கடைசியில் நிரந்தரமாக ஒரு நடிகையைச் சேர்த்துக் கொண்டார். இது போதாது என்று ஒரு கூட்டுத் தயாரிப்பிலும் நுழைந்து விட்டார். அதெல்லாம் பெரிய கதை. முடிவில் என்ன ஆயிற்று தெரியுமா? எல்லாம் போய் அவர் இறக்கும் தறுவாயில் ஏகப்பட்ட உடல் கோளாறுகள் தோன்றி துடிதுடித்து செத்தார். பணம் எல்லாம் போய்விட்டது. இது நடந்த கதை.

ஆகவே வாசகர்களே, ஏற்கனவே நான் கூறியது போல், நல்ல நண்பன், நல்ல மனைவிக்குச் சமம்தான். நண்பனை நீங்கள்தான் ஆராய்ந்து சேர்த்துக் கொள்ள வேண்டும். அப்படி இடையில் அவருடைய உண்மையான சொரூபம் தெரிந்தால், மெல்ல மெல்லவோ அல்லது உடனேவோ 'கட்' செய்துவிட வேண்டும். தயவு தாட்சண்யம் பார்த்தால், அவர்கள் புற்றுநோய் போல் உங்களை ஆக்கிரமித்து விடுவார்கள்.

வாழ்க்கையில் நீங்கள் உயர நண்பன்தான் ஊன்றுகோலாக இருக்கிறான். அதைப் போல அவனே உங்களது சரிவுக்குக்

**பழமொழி**

அயலான் வீட்டை நீ உலுக்கினால், உன் வீடு சீக்கிரம் உன் தலையில் விழும்!

படிப்பகம்

www.padippakam.com

சமையல் மோசமானால் ஒருநாள் நஷ்டம்; அறுவடை மோசமானால் ஓராண்டு நஷ்டம்; விவாகம் மோசமானால் வாழ்நாள் முழுவதும் நஷ்டம்.

-ஸ்வீடன்.

காரணமாக இருக்கிறான். இதை ஆழ்ந்து புரிந்துகொண்டு விழிப்புணர்வாக வாழ்க்கையில் முன்னேறுங்கள்.

## முடிவுரை:

நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு முதலில் கெட்ட நண்பர்கள் யார் யார் என்று இனம் கண்டு கொள்ளுங்கள். ஏனெனில், எல்லோருமே, வெளிப்பார்வைக்கு நல்லவர்களாகவே தெரிவார்கள். சற்று நெருங்கிப் பழகினால்தான், அவர்களது உள்நோக்கம், வக்ரபுத்தி, மனக்கோளாறு, ஒழுங்கீனங்கள், வஞ்சகம், பொறாமை போன்ற குணங்கள் மெல்ல மெல்ல வெளிச்சத்துக்கு வரும். இவர்களையெல்லாம் அடையாளம் காண்பது அவ்வளவு சுலபமல்ல. நீங்கள் சற்று விழிப்புணர்வாக இல்லாவிட்டால், அவர்கள் பறித்த குழியில் விழுந்து விடுவீர்கள்.

ஆகவே, யாரிடமும் சட்டென்று நெருங்கிப் பழகாதீர்கள். சற்று நெருங்கியும், நெருங்காமலும் பழகுங்கள். சற்று சந்தேகத்துடனும், ஆராய்ச்சி மனப்பான்மையோடும், விழிப்புணர்வாகப் பழகுங்கள். இப்படி மேற்சொல்லிய பத்து குணங்கள் இல்லை என்றால், அவரே உத்தமமான நண்பன். அவரை எக்காரணம் கொண்டும், விலக்கிக் கொள்ளாதீர்கள். வாழ்க்கையில் கடைசி வரை, உங்களுடைய அன்பிற்குரிய மனைவியைப் போல, இவர்தான் உங்கள் கூடவே வருவார்.

இந்த நூல் ஆசிரியருக்கு இரண்டு நண்பர்கள் மாத்திரமே, -சுமார் 50 வருடகாலமாக இவரது வாழ்க்கையோடு வந்து கொண்டிருக்கிறார்கள். மற்றவர்களெல்லாம், ரயில் பயண நண்பர்கள் போல, வந்தார்கள், சென்றார்கள்.

ஆகவே, நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுக்க, ஒரே வழி கெட்ட நண்பர்கள் யார் யார் என்று புரிந்து கொள்ளுதலே.



# நன்றி : (நினைத்ததை முடிக்கலாம்) நூலிருந்து

படிப்பகம்

www.padippakam.com




.......
காயத் தீய்ந்து கரியாய மாறுகின்றது
............ காலம்
முன்னே போக முடியினும் போவேன்
விடியலைக் காத்து நிற்குமோ
............ காலம்

இன்றைய விமர்சனங்களுக்குமுரிய ராஜினி திரணகமவின் நினைவுக் கருத்தரங்கில் (பாரிஸ் - 1992) முன்வரிசையில்
தோழர்கள் புஸ்பராஜா (2006), உமாகாந்தன் (2004) சபாலிங்கம்(1994)




படிப்பகம்

www.padippakam.com

# சிந்தனைக்கு...



பாலத்தை உடைக்கும் முன்னர்
உன்னால் நீந்திக் கடக்க முடியுமா
என்பதை உறுதி செய்து கொள்!

படிப்பகம்

www.padippakam.com

நான் தனிப்பட்டு யாருடைய வாழ்விலும் குறுக்கிட மாட்டேன்–அதைப்போல எனக்கென்று சில விதிமுறைகளை வைத்திருக்கிறேன்–ஆனால், அப்படியே நீங்களும் நடக்கும்படி நான் உங் களைக் கட்டாயப்படுத்தமாட்டேன்!

–யாரோ–

சிப்பாய்கள் சிங்கங்களாக இருந்தாலும், வழி நடத்துபவர்கள் கழுதைகளாக இருந்தால் எந்தப் பயனும் இல்லை.

– யாரோ. சுரத்.

எம் அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்த உங்கள் அனைவருக்கும் எமது நன்றி!

திருமதி புஸ்பராஜா—பிள்ளைகள்
மற்றும்
சகோதரர்கள்—மைத்துனிகள்—பிள்ளைகள்
சகோதரிகள்—மைத்துனர்கள்—பிள்ளைகள்

தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்
தர்மம் மறுபடியும் வெல்லும் !!

படிப்பகம்

www.padippakam.com



# அலமாரியில் உலகம்

ஈழ அரசியலையும் தமிழ்நாட்டு அரசியலையும் பிரித்துப் பார்க்கவே முடியாது. ஈழ அரசியல் ஆயுத அரசியலாக உருமாற்றம் கொண்ட காலத்தில், அவ்வரலாற்றில் தமிழகம் பெரும் பங்கு வகித்திருக்கிறது. ஆரம்பம் தொட்டே செய்தி வழியாகவும், நேரடி அனுபவத் தகவல் வழியாகவும் ஈழப் பிரச்னை இந்தியாவுக்குக் கடத்தப் பட்டிருக்கிறது.



இச்சூழலில் பின்னிப் பிணைந்து நமக்கு ஏற்கெனவே பரிட்சயமான வெலிக்கடை போராட்டம், யாழ் நூலக எரிப்பு, திலீபன் பட்டினிச் சாவு, சிங்கள பேரினவாதத்தால் நசுக்கப்பட்ட தமிழர் வாழ்வியல் போன்ற சம்பவங்களின் மீது புது வெளிச்சத்தைப் பரப்பிவிட்டுச் செல்லும் இந்த வரலாற்று ஆவணப் புத்தகம் சிங்கள பயங்கரவாதத்தினை நம்முன் விரித்துப் போட்ட கையோடு ஈழ ஆயுத அரசியலை சுய பரிசீலனை செய்து கொள்ளவும் மறு ஆய்வுக்கு உட்படுத்த வற்புறுத்துகிறது. சி.புஷ்பராஜா அலைந்து திரிந்து தகவல்களைச் சேகரித்து இந்நூலைக் கொண்டு வந்திருக்கிறார். புஷ்பராஜா தமிழ் மாணவர் பேரவையில் செயல்பட்டவர். பிறகு, ஆயுதம் தாங்கிய போராட்டத்திற்கு வழி வகுத்த தமிழ் இளைஞர் பேரவையைத் தொடங்கி அதன் தலைவராகச் செயல்பட்டவர். ஒரு களப்போராளி இவர், மனிதநேயக் கட்டுப்பாட்டுடன் அணுகி இந்நூலை எழுதியும் இருக்கிறார். இதுவே இதன் தனிச் சிறப்பாகிறது.

"இதை எழுதுவதற்காக பலரிடம் தகவலறியச் சென்றபோது, 'நீ ஓர் இயக்கம்; நான் ஓர் இயக்கம்' என்றும், சிலர் 'இயக்கங்களில் ஈடுபட்டு நொந்து போய் இருக்கிறோம். இப்போது பேச ஆர்வமே இல்லை' என்றும், சிலர் 'ஏதாவது உங்களிடம் சொல்லி, அதை நீங்கள் எழுதப் போய் எங்கள் உறவுகளுக்கு ஏதாவது பிரச்னை வந்துவிடும்' என்றும் ஒதுங்கிப் போனார்கள்" என்று புஷ்பராஜா விவரிக்கும் தகவலிலிருந்து அச்ச உணர்வில் மாட்டித் தவிக்கும் இன்றைய ஈழத் தமிழர்களின் நிலை, காட்சிப் படமாக விரிகிறது. ஈழப் போராட்டத்தின் சாட்சியான சி. புஷ்பராஜா, இப்போது உயிருடன் இல்லை.●

வெளியீடு: அடையாளம்
1205/1 கருப்பூர் சாலை, புத்தாநத்தம்-621310 ரூ.425/-

நன்றி : குமுதம்

படிப்பகம்